Registered No. M. 408.

உ

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு.

திங்கட்கொருமுறைதோன்றித்திகழ்வது.

THE THIRUNAVUKARASU

PUBLISHED ONCE IN A MONTH.

பத்திராதிபர்—தி. பா. சிவராமபிள்ளை.

புத்தகம் உ] திருநெல்வேலி: விசுவாவசுஸு புரட்டாசிமீ; 1905-ம்ஸு செப்டெம்பர்மீ [இலக்கம் அ

"அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு."

உ

திருச்சிற்றம்பலம்.

"மூந்திமா விலங்கலன் றெடுத்தவன் முடிகடோ ணெரிதரவே, யுந்திமா மலரடி யொருவிர லுகிர்நுதி யாலடர்த்தார், கந்தமார் தருபொழின் மந்திகள் பாய்தரமதுத் திவலை, சிந்துபூக் துறைகமழ் திருநெல்வேலி யுறை செல்வர் தாமே."

"வேள்பட விழிசெய் தன்று விடைமே லிருந்து மடவாள னோடு முடனாய், வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தெ னுளமே புகுந்த வதனால், வேழ்கடல் சூழி லங்கை யரையன்ற னோடு மிடரான வந்து நலியா, வாழ்கட னல்லநல்ல வவைநல்ல நல்ல வடியா ரவர்க்கு மிகவே."

திருச்சிற்றம்பலம்.

உ

மன்னிப்பும் குணமெனக் கோடலும்

இவ்விரண்டு கொள்கைகளுக்கும் வேற்றுமை யாது? "மன்னிப்பானது" குற்றவாளி குற்றமென்று உணர்ந்து செய்த வினையின் பாற்பட்டது; "குணமாகக் கோடலானது" செய்யப்படும்பொழுது வெளிப்படக்குற்றமாகத்தோற்றினும் அந்தரங்கத்தில் சுத்தமான கருத்துடன் செய்யப்படுங்கர்மத்தைப்பற்றியது. ஒருவன் வருந்துவதைப்பார்க்க இச்சித்து அவனைத்துன்பப்படுத்துதலாகிய செய்கை குற்றமுடையது. அதை உட்கொள்ளாமலும் அக்குற்றவாளிக்கு பிரதி அபகாரம்செய்யாமலுமிருத்தல் மன்னிப்பாம். ஒருவனுக்குக் காலில் முட்புகுந்திருந்தால் அதனை அசைத்துப்பிடுங்குங்கால் அவனுக்கு நோவுண்டாகுமென்று தெரிந்தும் அவனைத்துன்பப்படுத்திப் பிடுங்கும் செய்கையானது தற்காலம் வெளிப்படக்குற்றமுடையதாகத்தோற்றினும் அந்தரங்கத்தில் குணமாகக் கருதத்தக்கதாம். ஆகவே மன்னிப்பும் குணபாவமும் பொருள் வேறுபட்டுள்ளன. நிற்க.

உலகத்தில் ஏற்பட்டமதங்கள் ஒவ்வொன்றிலும் கடவுளைப் பிதாவாகவும், பக்தர்களைக்குமாரராகவும் முறைப்படுத்தியிருக்கின்றனர். அம்முறையை ஆராயுங்கால், இவ்வுலகத்தில் மனிதர்களுள், மக்கள் பிதாக்களிடத்தில் எவ்வளவிற்கு உரிமைபாராட்டுகின்றனரோ, அவ்வளவிற்கு ஜீவர்கள் பரம்பொருளிடத்தில் பாத்தியதை கொண்டாடுகின்றார்கள். துன்பப்பட்ட ஒருவன் தனக்கு நிவிர்த்திதேடுமிடத்தில் அளவிற்கு மிஞ்சியும் பிரார்த்திக்கக் கூடும். தன்னை மறந்து ஒரே கருத்துடன் செய்யும் பிரார்த்தனைக்குமுறைமையும் அளவும் ஏற்படுவது இயல்பன்று. ஆனால் பிரார்த்தனைக்கு இரங்கி அருளுபவரிடத்தில் வரையறை ஏற்படுமோ அல்லவா என்று கேட்கில் ஏற்படவேசெய்யும். ஏற்பட்டால் மட்டும் நன்மையுண்டு. பிரார்த்திக்கிறவனுடைய பக்குவத்தையும், குற்றத்தின் உண்மையுணர்ச்சியையும் தூக்கிப்பார்த்து, மன்னிக்கத்தக்கவற்றை மன்னித்தும், மன்னிக்கத்தகாதவற்றைத் தெண்டித்தும் குணப்படுமுறைமையில் மட்டும் கருத்தைச்செலுத்தியருளுதல் பரமபிதாவினுடைய செய்கையாம்.

ஆதலால் ஒருவனுடைய குற்றங்கள் எல்லாவற்றையும் மன்னித்தலாவது எல்லாவற்றையும் குணமாகக்கோடலாவது நல்லகொள்கையென்று ஒருவரும் கொள்ளார்.

இலக்குமணப்போற்றி.

தனிப்பாடல்.

நெஞ்சொடு கிளத்தல்.

மெய்யே நினையாய்
மெய்யே உரையாய்
ஐயோ! இனியோ
உய்வாய் உளமே?

கையொப்பவிகிதம்:— உள்ளூர், வெளியூரார்க்குத் தபாற்கூலி யுட்பட முன்பணமாக ஒரு வருஷத்திற்கு ரூ 1, மோர்மேன் சிங்கப்பூருக்கு ரூ 2, தனிப்பிரதி 1-க்கு அணா 2.

உ

சிவமயம்.

திருநாவுக்கரசு.

திருச்சிற்றம்பலம்.

"தாமரைநறு மகவிதழ் தருவன சாய்பெறுசிறு தளிரினை யனையன—சார்தருமடி யவரிடர் தடிவன தாயினுநல கருணையை யுடையன, தூமதியினை யொருபது கொடுசெய்த சோதியின்மிகு கதிரினை யுடையன—தூயனதவ முனிவர்க டொழுவன தோமறுகுண நிலையின தலையின, வேமாசினை மறைகளின் முடிவுக ளோவிடுபரி சொடுதொடர் வரியன—வேவறுமுணர் வொடுசிவ வொளியினை யூபகசி வொடுசெவி செய்தபுக, ழாமரசுய ரகநெகு மவருள ஞானசதி கையினா னருளவ-ஞமரசுகொ ளாசெனை வழிமுழு தாளரசத னடியிணை மலர்களே."

திருச்சிற்றம்பலம்.

வாழ்வு.

மாந்தர் உள்ளும் புறமும் ஒத்து வாழ்கின்றிலர்.—இது பெரும்பான்மை. உள்ளும்புறமும் ஒத்து வாழ்வார் ஒரு சிலரே ஆவர். ஆகலின், உள்ளும் புறமும் ஒத்து வாழ்தல் அரியவற்றுளெல்லாம் அரியதொன்றும். உள்ளும் புறமும் ஒத்து வாழ்தலின் அருமையை ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையின் வைத்தே அறிந்துகொள்ளுதல் கூடும். உள்ளும் புறமும் ஒத்தலாவது உள்ளத்தான் உள்ளுதலும், நாவினான் நவிறலும், மெய்யினான் இயற்றலும் ஒன்றுதல். இவ்வாறன்றி, உள்ளத்தான் உள்ளுதல் ஒன்றும், நாவினான் நவிறல் ஒன்றும், மெய்யினான் இயற்றல் ஒன்றுமாக வேறுபடின், அது உள்ளும்புறமும் ஒவ்வாத வாழ்க்கையாம். இவ்வொவ்வாத வாழ்க்கையினையே மாந்தரிற் பெரும்பாலார் தமக் கொத்தவாழ்க்கையெனக் கொண்டொழுகுகின்றனர். அவ்வாழ்க்கை உயர்ந்தோரால் வாழாமையின்வைத் தெண்ணப்படும்போலும்.

மாந்தர் அனைவரும் பிறப்பால் ஒருவர். அவருள் ஒவ்வொருவர்க்கும் உள்ளம் மொழி செய்கை என இம் மூன்றும் உள. ஒவ்வொருவரும் உள்ள முதலிய மூன்றுமுடையாராய வழியும், அவர் தனித்தனி மூவராகாது, ஒவ்வொருவரோ ஆவர். ஆயினும் ஒருவர், உள்ளத்தான் ஒருவரும், மொழியான் மற்றொருவரும், செய்கையாற் பிறிதொருவருமாகக் காணப்படின், அவரை ஒருவரென்போமா, மூவரென்போமா? அவரோ இடம் பொழுதென்னும் அவற்றின் வேறுபாட்டால், இன்னும் பலராவர் போலும்! இங்ஙனம் ஒருவரே பலராயின், அவரை, மாந்தருள் ஒருவராய்வைத் தெண்ணுதல் எங்ஙனங் கூடும்? அவர் தமக்குத் தாமே ஒருவராதலும் எங்ஙனங் கூடும்? கூடாதாயின், அவர் தமக்கும் பிறர்க்கும் என்கடவர்? அவர் வாழ்க்கையும் யாதாய் முடியும்? இதனாலன்றோ மாந்தர் இடம் பொருளேவலும், உளமுரை வினையும் உடையராயவழியும் அவற்றால் இன்பநுகராது துன்புறுகின்றனர்? உளமுரை வினையெனு மூன்றனும் மாந்தர் தமக்குத்தாமே பகைவராயின், அவர் தம்மொத்த ஏனை மாந்தரோடொத்து வாழ்தல் எங்ஙனங் கூடும்?

மாந்தர் உடம்பான் வாழ்துமென்றலும், இடம் பொருளேவலான் வாழ்துமென்றலும், இம்மையான் வாழ்துமென்றலும், மறுமையான் வாழ்துமென்றலும், இவையனைத்தினும் வேறாய வீட்டான் வாழ்துமென்றலும் அவர் தம் உளம், உரை, வினையெனு மூன்றும் ஒத்தவழியே உண்டாம், இலையெனின் இலையாம்.

உடப்பு முதலியவற்றான் வாழ்துமென்பார்க்கு அவ்வுடம்பு முதலியவற்றின் நிலையாமை நோக்கித் துன்பமுண்டாம். வீட்டான் வாழ்துமென்பார்க்கு அவ் வீடு கைகூடுதலருமை நோக்கித் துன்பமுண்டாம். உடப்பு முதலியன நிலையினும் நிலையாதொழியினும், வீடு கைகூடினும் கூடாதொழியினும், எவ்வாழ்வினும் உளம் உரை வினையெனும் மூன்றனுந் தூயராயினார்க்கு எத்திறத்தானும் இன்பமே உண்டாம்; அவ்வின்பமும் உண்மையின்பமேயாம்; அவர்க்கு "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என ஒகிய இப்பொய்வாழ்வும் மெய்வாழ்வேயாய்ப் போதரும்போலும்! ஆகவே எவ்வாழ்வுள்ளும் மெய்வாழ்வு பொய்வாழ்வு என இரண்டுளவாமென்பதும், அவற்றுள்ளும் மெய்வாழ்வென்னும் அதுவே இன்பந் தருவதொன்றும் என்பதும் பெறப்படும். பொய்வாழ்விலே இன்பந் தேடுவார் உமிக்குற்றிக் கைவருந்துவார்.

* * * * * * *

உலகம், உயிர், கடவுள் எனப் பொருள் மூவகைப்படும். அவற்றுள் நடுவணதாகிய உயிர் உலகத்தோடு கூடியும் வாழும், கடவுளோடு கூடியும் வாழும்; உலகத்தோடு கூடி வாழும் பொழுது அதன் தன்மை எய்தியும், கடவுளோடு கூடி வாழும பொழுது அதன் தன்மை எய்தியும் நிற்கும், கட

வுட்பொருள் உலகம் உயிர் என்னும் அவ்விரண்டினோடு கூடிநின்றும் கூடாமல், ஓங்கிநிற்கும்; அதனால் அது அவ்வுலகத்தின் றன்மையாவது, உயிரின் றன்மையாவது எய்துதல் இல்லை; எய்தாதெனினும் வாழ்தலின், அது வாழா வாழ்க்கையை உடையதாம்; அதனைப் பிறிதொன்றுவாழ்வித்தல் இல்லை, தானே பிறிதொன்றை வாழ்விப்பதல்லது.

கடவுட்பொருள் உயிரை உலகத்தோடு கூட்டி, உலகவாழ்வு எய்துவித்தும், தன்னோடுகூட்டித் தன் கடவுள் வாழ்வு எய்துவித்தும்நிற்கும்; தோற்றமாத்திரையின் உலகத்தோடு கூடிநின்றே உயிர் கடவுள் வாழ்வு எய்துதற்கு இழுக்கில்லை.

உலகம் அறிவில் பொருளாகலின், அறிவுடைப்பொருளாகிய உயிர்க்கு, அதனோடு கூடிவாழுதல் மேன்மையன்றாம்; ஆயினும், அவ்வுயிர் கடவுட்பொருளோடு கூடிவாழ்தற் பொருட்டாய்க், கடவுட் குறிப்பான் நிகழ்தலின் அதுவும் வாழ்க்கையின் வைத்துணரப்படும். படவே, உயிர் கடவுட் குறிப்போடு பொருந்த வாழாதாயின், அதன் உலகவாழ்க்கை வாழ்க்கையன்றாமென்பதாயிற்று. இதனையேபோலும் "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே" என்றோதிற்று மணிவாசகம்.

உலகம் அதன் நிலையாமை நோக்கிப் பொய்யாகலின், அதனோடு கூடி வாழும் வாழ்வும் பொய்வாழ்வாம்; அதனை மெய்யெனக்கோடல் புன்மையாம். உலகத்தோடு பொருந்திநின்றே அதனோடு பொருந்தாது ஓங்கிநிற்றலை வேண்டுவார், அவ்வாறு இயல்பான் ஓங்கிநிற்கும் கடவுட்பொருளின் குறிப்பை நோக்கி, அதனோடு பொருந்தவொழுகி வாழ்தல்வேண்டும். அவ்வாறொழுகி வாழும் வாழ்வு புறத்தே ஒருவகையால் உலகவாழ்வெனத் தோற்றினும், உண்ணோக்குவார்க்கு அஃதின்மையான், அஃதுலகவாழ்க்கையாகாது கடவுள்வாழ்க்கையேயாம். எனவே உலகவாழ்வாகிய பொய்வாழ்விலேயே, கடவுள்வாழ்வாகிய மெய்வாழ்வும் வாழலாமென்பது தெற்றென விளங்கும். ஆயிற் கடவுள் வாழ்விற் பயிற்சி இடையறாது நிகழ்தலின்றிச் சிறிதயரின் அவ்வுயிரை உலகவாழ்வு ஆறலைத்துக் கீழ்நூக்கும். இவ்வுண்மை உணர்ந்து தம்மை உய்யுநெறிக்கண் உய்க்கும் ஆற்றலுடையார் அயர்வின்றியும் மயர்வின்றியும் வாழ்ந்து மெய்வாழ்வெய்துவர்.

திருநெல்வேலி மாணவர் சங்கத்தின் ஹித மதாபிமானிகளிற் சிலர் விக்கிரஹாராதன விஷயமாய்ப் பிரசுரஞ்செய்திருக்கிற பத்திரிகையிற்கண்ட வினாக்களுக்கு

விடை.

7-வது வினா:— "கடவுள் தூணிலும் துரும்பிலுமாக எங்கும் வியாபித்திருப்பதாலும் எப்பொருளிலும் எத்த அணுவிலும் சாக்ஷிபூதமாயிருப்பதாலும், எப்பொருளை வைத்து பூசித்தாலும் அவரை பூசித்தலாகுமென்கிறார்கள். அப்படியானால் கோவிலில் விக்கிரஹத்தை மந்திரத்தினால் ஸ்தாபனம் செய்வானேன்?

அஷ்டபந்தனம் அடிக்கடிசெய்வதின் கருத்தென்ன? அது சுவாமி அசையாமல் ஆடாமலிருப்பதற்கா? அப்படியானால் அதற்கு நாழிகை நக்ஷத்திரம் பார்க்கவேண்டியதென்ன?"

இதற்கு விடை:—

எப்பொருளைக் கண்டாலும் ஈசுவரவடிவமாக எண்ணுகிற மகான்களுக்கு கோயில் அவசியமில்லையென்று சொல்லலாம். அவர்களுக்கோ பேதபுத்தியில்லை. இப்பிரபஞ்சத்திலுள்ள சகல யதார்த்தங்களிலும் ஈசுவரஸான்னித்தியத்தை யறிந்து சாக்ஷாத் ஈசுவரரிடத்தில் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டியதோ அவ்விதம் பக்திபுரஸ்ஸரமாயெதைப்பார்த்தாலும் நடந்துவருவார்கள். அவர்கள் பூஜிக்காத வஸ்துவே கிடையாது. கடவுள் தூணிலும் துரும்பிலுமிருப்பதாக அந்தரங்கசுத்தியாயெண்ணி சஞ்சரித்து வருகிற மஹா புருஷர்களுக்குள்ள விதி அஞ்ஞர்களான என்னைப்போலொத்தவர்களுக்குப் பொருந்துமோ? இப் பூலோகத்தில் கண்ணுக்குப் புலப்படும் வஸ்துக்களெல்லாம், இது வீடு, இது புஸ்தகம், இது நன்மை, இது கெடுதல், இது பிரியம், இது அப்பிரியம் என்கிறதாக மாத்திரம் என்னைப்போலொத்தவர்களுக்குத் தோன்றுகிறதேயொழிய பரமாத்ம விபூதிகளாகத் தோன்றவில்லையே? மின்சாரம் (Electricity) என்றால் இன்னதென்று தெரியாத பாலகனிடத்தில் மின்சாரம் எங்கும் வியாபித்திருக்கிறதென்று உபதேசித்தால் மாத்திரம் போதுமா? அதின் சுவரூபம் இவ்வகைப்பட்டது, அதின் சக்தி இன்னவிதம், அதினால் நாம் அடையக்கூடிய பிரயோஜனமின்னது, அடைவதற்குள்ள உபாயம் இப்படி, யென்கிற விபரங்களைப் பற்றிப் பாலகனுக்குப் போதிப்பிக்க வேண்டுமானால் தகுந்த முயற்சிகளைச் செய்து, எந்திரங்கள் பதார்த்தங்கள் இவைகளைக் கிரமப்படி சேர்த்து யுக்தியினால் எங்கும் வியாபித் திருக்கிற மின்சாரத்தை ஓரிடத்தில் ஸ்தூலதிருஷ்டிக்கு வெளிப்படும்படி செய்து, அதின் சுவரூபதத்துவங்களை சாக்ஷாத்கரிக்கும்படி யேற்படுத்தி அறிவுண்டாக்கி வைப்பதைப் பார்த்திருக்கிறோமல்லவா? இவ்விதமாகவே நம்முடைய சிற்றறிவுக்குத்தக்கபடி சர்வ வியாபியான கடவளின் அமித சக்தி ஸஹித நிரதிசயானந்த சுவரூப விஷயமான ஞானமுண்டாவதற்காக ஈசுவர சுவரூப சாக்ஷாத்காரமடைந்தவர்களும் மனோ நிஷ்டையில் தேர்ச்சியடைந்த பரயோகீசுவரர்களுமான ருஷி சிரேஷ்டர்கள் சர்வவியாபியான கடவுளை அவர்களுடைய தபோ மஹிமைக்கு அனுகுணமாக மனோசக்தியை உசிதமான மந்திரங்களின் மூலமாயுபயோகித்து ஈசுவர சக்தி ஓரிடத்தில், அதாவது விக்கிரஹத்தில், வியக்தமாய் வெளிப்படும்படி செய்து ஆலய நிர்மாணஞ் செய்திருக்கிறார்கள். மனதை ஒருமைப்படுத்தி மனோசக்தியை ஓரிடத்தில் செலுத்தி ஈசுவர ஸான்னித்தியம் அவ்விடத்தில் விசேஷமாய் விளங்கச் செய்யும் கிரியை விக்கிரஹ ஸ்தாபன மந்திரமென்று

சொல்லப்படுகிறது. சரியானபடி புத்தியைச் செலுத்தி ஏற்படுத்தப்பட்ட மின்சார யந்திரம் எப்படி யுபயோகப்படுமோ, அப்படியே சரியானபடி மந்திரத்தினால் ஸ்தாபனஞ் செய்யப்பட்ட ஆலய விக்கிரஹங்களிடமிருந்தும் ஸர்வோத்கிருஷ்டமான பயன்களை யடையக்கூடும்.

இப் பிரபஞ்சத்தில் நடந்துவருகிற சகல காரியங்களும் மனதினால் நடத்தப்பட்டவைகள். ஸ்தூல திருஷ்டிக்கு விஷயமான மாடமாளிகை யெல்லாம் மனதன்னியில் உண்டாயிருக்கக்கூடியதல்ல. முதலில் மனதில் ஆலோசனை செய்து மனதினால் கட்டிடத்தை ஏற்படுத்திக்கொண்டு அப்பால் மனதிலுள்ளகட்டிடத்தைப் பார்த்துப்பார்த்து ஸ்தூலகட்டிடம் கட்டப்படுகிறது. எந்தக்காரியத்தை முடிக்கவேண்டுமானாலும் மனோசக்தியை உபயோகப்படுத்தித் தீரவேணும். எவ்விதமான மனோசக்தியை உபயோகப்படுத்த வேணுமென்பது உத்தேசிக்கப்பட்ட அந்தந்த காரியத்தைப் பொறுத்திருக்கிறது. காரியம் ஸாமானியமாயிருந்தால் அதற்கு வேண்டிய மனோசக்தியும் ஸ்தூல பிரவர்த்தியும் அப்படியே யிருக்கவேணும். காரியம் உயர்ந்ததாயிருந்தால் மனோசக்தி பிரபலமாயும் ஸ்தூலப் பிரவர்த்தி அதிக நுட்பமாயு மிருக்கவேணும். குளத்திற்கு மண்கரை போடவேணுமென்றால் மனஸ்ஸங்கல்பம் சாமான்னியமாகவும் மண் சுமப்பது முதலான ஸ்தூல காரியங்கள் ஜாஸ்தியாகவு மிருக்கவேண்டும். நியாயாதிபதி தீர்ப்பு எழுதவேண்டுமென்றால் மனஸின் வேலை ஜாஸ்தியாகவும் பேனாவைப் பிடித்து காகிதத்தில் எழுதுகிற ஸ்தூலகாரியம சுவல்பமாயுமிருக்கிறது. சகலகாரியங்களுக்குள் சிரேஷ்டமானதும், சர்வோபகாரங்களுக்குள் மகத்தானதும், இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் ஜீவர்களுக்கு அளவிடக்கூடாத நன்மையையுண்டாக்கி வைக்கக்கூடியதும், எங்கும் வியாபித்து சராசராத்மகமாயிருக்கிற இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றிலும் அந்தர்யாமியாயிருக்கிற பரமாத்மாவை பக்தியினால் சுத்தர்களான ஜீவர்கள் ஸாக்ஷாத்கரிக்கும்படி செய்துவைக்கிறதுமான விக்கிரஹ ஆவாஹன காரியத்தை பெரியோர்கள் பக்தி ஸமிருத்தியினாலும், தபோநிஷ்டையினாலும், யோக பலத்தினாலும், ஈசுவர கடாக்ஷத்தினாலும் உறுதியடைந்திருக்கிற தங்கள் மனோ சக்தியைக் கொண்டும் ஸ்தூலபரமாய் ஷை சக்திக்கு அனுகுணமானதும், ஷை சக்தி இவ்வகைப்பட்டது, அதின் காரியம் இன்னதென்று வெளிப்பட ஸ்தூலேந்திரியங்களுக்குள் ஆதியும் நுட்பமுள்ளதுமான சுரோத்திரேந்திரியத்திற்கு விஷயமானதுமான வாக்குச்சாரணமாகிற ஸ்தூலகாரியத்தைக் கொண்டும் செய்துவைத்திருக்கிறார்கள். ஷை மனோசக்திப் பிரயோகமும் வாக்குச்சாரணமுஞ் சேர்ந்து மந்திரமென்று சொல்லப்படுகிறது. மந்திரத்தினால் சாதிக்கக்கூடாதது யாதொன்றுமில்லை. மந்திரபலத்திற்கு மேல் பலமுமில்லை. ஸத்குருவின் அநுக்கிரஹத்தினால் மந்திரங்களைக் கிரஹித்து அவைகளை யுபயோகப்படுத்தும் வழிகளைத் தெரிந்தவர்களுக்கு மந்திரங்களின் யோக்கியதை தெரியவரும்.

பூர்வபக்ஷிகள் மந்திரமென்றால் இன்னதென்று அறிந்துகொள்ளாததினால் கோயிலில் விக்கிரஹத்தை மந்திரத்தினால் ஸ்தாபனஞ் செய்வானேனென்று வினவும்படி நேரிட்டிருக்கிறது. ஆனால் அவர்கள்பேரில் குற்றஞ் சாட்ட இடமில்லை. மந்திரோச்சாரணஞ் செய்ய அதிகாரிகளென்று பெயர் வைத்துக்கொண் டிருப்பவர்களிலேயே அநேகர்களுக்கு மந்திரங்களின் யோக்கியதை தெரியாமலிருக்கிறதே! மந்திரங்களென்றால் மனது எவ்விடஞ்சென்றாலும் முன் உருப்போட்ட வார்த்தைகளைக் கொண்டு முணு முணுப்பதென்று எண்ணுகிறார்களே யொழிய வேறொன்றையுங் காணோமே? மந்திரங்களின் சரியான உச்சாரணத்தோடு கூட, அவைகளின் அர்த்தங்களை மனதில்கொண்டு மனோசக்தியை பிரயோகஞ் செய்ய வேண்டுமென்பதே நமது வைதிகர்களுக்குப் பெரும்பாலும் மறந்து போய்விட்டதே. இது கலியின் மாஹாத்மியந்தான். இந்தக் காலங்களில் சாதாரணமாய் நடந்துவருகிற மந்திரப் பிரயோகங்களைக் கவனித்தால் பூர்வபக்ஷிகளின் கேள்வியில் கொஞ்சங்கூட பிசகில்லையென்று தெரியவரும். ஆனால் ஆலயங்கள் சம்பந்தப்பட்டமட்டிலாவது நாம் முழுவதும் மோசம் போகவில்லை யெனத் தோன்றுகிறது. முக்கியமான ஆலயங்களிலுள்ள விக்கிரஹங்களெல்லாம் நமது முணுமுணுக்கும் வைதிகர்களால் ஸ்தாபனஞ் செய்யப்பட்டவைகளல்ல. முன் காலங்களில் மஹருஷிகளாலும், பரமயோகிகளாலும் கிரமப்படி ஸ்தாபிக்கப்பட்டவைகளா யிருக்கின்றன. அவைகளைக் கெடுத்து விடாமலிருக்கும்படி மாத்திரம் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமை. இதைப் பற்றிய மற்ற விபரங்கள் பூர்வபக்ஷிகளின் 9-வது வினா சம்பந்தமாய் சொல்லப்படும்.

மேல்கண்டபடி பெரியோர்களா லேற்படுத்தப்பட்ட ஆலயங்களிலுள்ள விக்கிரஹங்களில் அசைவு காணப்பட்டாலும வேறுகாரணங்களுக்காகவும் அஷ்டபந்தனம் முதலானவற்றை நடத்துகிறதுண்டு. இப்படிப்பட்டகாலங்களில் விக்கிஹங்களை யெடுத்து மறுபடியும் கிரமப்படி ஸ்தாபனஞ்செய்கிறார்கள். இப்படிச்செய்வதற்கு நாழிகை நக்ஷத்திரம் பார்க்கவேண்டியதென்னவென்பது பூர்வபக்ஷிகளின் கேள்வி. எவ்விதமானகாரியத்திற்கும் நாழிகை நக்ஷத்திரம் பார்க்கவேண்டியதில்லையென்று அவர்களுடைய அபிப்பிராயமோ, அல்லது, விக்கிரஹஸ்தாபனத்திற்குமாத்திரம்அவைகளைக்கவனிக்கவேண்டியதவசியமில்லையென்ற தாத்பரியமோ தெரியவில்லை. ஒன்றுக்குமே பார்க்கவேண்டியதில்லையென்றால், மெது வர்ணசாஸ்திரங்களையும், திதிவாரநக்ஷத்திரங்களின் தாரதம்மியயோக்கியதைகளையும், இவைகளை நன்றாய்விளக்கிக்காட்டக்கூடிய ஜோதிஷசாஸ்திரவிஷயங்களையும் அவர்கள் அறிந்திருப்பதில்லையென்று வெளியாகிறது. அல்லது, விக்கிரஹஸ்தாபனத்திற்கு மாத்திரம் இந்தக்கேள்வி சம்பந்தப்பட்டதானால், மற்ற காரியங்களுக்கு நாழிகை நக்ஷத்திரம் பார்க்கவேண்டியது நியாயமானால் எந்த விசேஷமுகாந்திரத்திற்காக விக்கிரஹஸ்தாபனத்திற்கு மாத்திரம் அவைகளைக் கவனிக்கவேண்டியதில்லையென்கிறதாக பூர்வபக்ஷிகளைப்பதில் கேள்வி கேட்பது நியாயமென்று தோன்றுகிறது. இது நிற்க. அஷ்டபந்தனகாலங்களில் மறுபடியும் விக்கிரஹஸ்தாபனஞ் செய்வதெப்படியென்பது கவனித்தால் அது வெகுஜாக்கிரதையாகவும்

சரியான காலங்கள் தவமறாலும் செய்யப்படவேண்டிய காரியமென்று தெரியவரும். மஹான்களால் ஆவாஹனஞ்செய்யப்பட்ட விக்கிரஹங்களினின்றும் ஈசுவரருடைய விசேஷ சான்னித்திய சக்தியினால் ஆகர்ஷணஞ்செய்து தற்காலத்திற்கு மற்றொரு பிம்பத்தில் பிரவேசத்தைச்செய்து வைத்து, அப்பால் பூர்வவிக்கிரஹத்திற்குச் செய்யவேண்டிய ஸம்ஸ்காரங்களைச்செய்து நன்றாய்ச்சோதித்தும் பரிஷ்காரஞ் செய்யப்பட்டிருக்கிறதுமான அதின் ஸ்தானத்தில் கெட்டியாய் திரும்பவும் ஸ்தாபித்து, அப்பால் மேற்கண்ட மற்றொரு பிம்பத்திலிருந்து ௸ சக்தியை மறுபடியும் ௸ விக்கிரஹத்தில் தகுந்த மந்திரங்களினால் ஆவாஹனஞ்செய்து அபிஷேகாதிகளை நடத்தி வைக்கிறார்கள். ௸ கிரியைகள் யாவத்தும் அநேகபாகம் மானஸிகமாகவும் சிலபாகம் ஸ்தூலகிருதமாகவுமிருக்கின்றன. தேசத்தின் க்ஷேமத்தையும் ஜனங்களின் க்ஷேமத்தையுமுத்தேசித்து ஜோதிஷசாஸ்திரப்பிரகாரம் அனுகூலமான காலங்களில் ௸ கிரியைகள் செய்யப்படவேண்டியது. அநுகூலமான காலங்களின்னவை, பிரதிகூலமான காலங்களின்னவையென்று சாஸ்திரங்களில் சொல்லியதை யாக்ஷேபிக்கிறதாயிருந்தால் அல்லது, சந்தேகிக்கிறதாயிருந்தால் அதைப்பற்றி இந்த இடத்தில் யாதொன்றும் சொல்லக்கூடியதில்லை. அது பிரகிருதத்திற்கு சம்பந்தப்படாத விஷயம்.

இனி, மறுபடியும், மின்சார யந்திர உதாரணத்தை யெடுத்துக்கொள்வோம். எப்படி நன்றாயேற்பட்ட மின்சார யந்திரத்தை யுபயோகப்படுத்தத் தெரியாதவன் அதினால் யாதொரு பயனையுமடையமாட்டானோ, அப்படியே ஆலய விக்கிரஹங்களின் மகிமையை யறியாத மூடர்கள் ஆலயங்களுக்குள் சென்று பக்தியன்னியில் சுற்றிச்சுற்றி வந்தாலும் ஞானவிருத்தியைக்காணார்கள். மாணாக்கர் உபாத்தியாயர் சொல்வதை யனுசரித்து மின்சார யந்திரங்களைப்பலதடவை ஒத்துப்பார்த்து அவைகளில் காணப்படும் அத்புதங்களை அந்தந்தக்காலங்கள் தவறாது கவனித்து ஜாகரூகராய் அறிந்துகொண்டாலொழிய மின்சாரத்தின் தன்மையும் எப்படி மாணாக்கருக்கு தெரியவராதோ, அப்படியே பிரம்மவித்தை மாணாக்கரும் பிரம்மவித்துக்கள் ஏற்படுத்திய கிரமமார்க்கத்தை யனுசரித்து அனுஷ்டான பானுப் விக்கிரஹங்களின் அந்தர்யாமியான பரமேசுவரனைத் தியானஞ்செய்து எந்தக் காலத்தில் ஈசுவரசாக்ஷாத்காரம் லபிக்குமென்று இடைவிடாது எதிர்பார்த்திருந்து உபாஸனைசெய்தலொழிய ஈசுவரஸ்வரூபஞானமேற்பட மாட்டாது. சாதாரண மாணாக்கர் ஆரம்பத்தில் மின்சார யந்திரத்தினால் மின்சாரத்தின் யோக்கியதைகளையறிந்து, அப்பால் எங்குமுள்ள மின்சாரத்தின் தன்மை இப்படிப்பட்டதென்று ஞானமுண்டாகிறதோ, அப்படியே உபாஸகர் ஆரம்பத்தில் விக்கிரஹத்தின் மூலமாய் ஈசுவரஸ்வரூபஞானத்தை யடைந்து, அப்பால் ௸ ஈசுவரரே சகலத்திலும் அந்தர்யாமியாயிருக்கிறாரென்பதைத் தெரிந்தமாத்திரத்தினால் அணுதுரும்புமுதலானவையும் ஈசுவரவடிவாகவே வெளியாகிறது. இப்படி விக்கிரஹத்தின்மூலமாய் உபாஸனைசெய்யவேண்டுமென்றால் ஒவ்வொருவரும் தனித்தனியாக அவரவர் கிரஹத்தில் விக்கிரஹத்தை யேற்படுத்திக் கொண்டால் போதாதாவென்று சங்கையுண்டாகலாம். ஆனால் இச்சங்கை நீடித்திருக்கக்கூடியதல்ல. தகுந்த காரணங்களுக்காகவே பொதுவான ஆலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. கொஞ்சம் விசாரித்தால் காரணங்கள் வெளியாகும். இதின் மற்றொரு இடத்தில் சிலகாரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆலய நிர்மாணத்தினாலேயே இப்பிரபஞ்சத்திலும் தனித்தனியான ஜீவசரீரங்களிலுமுள்ள தத்துவங்களும், ஆத்மானாத்ம சம்பந்தபேதங்களும் நன்றாய் வெளிப்பட்டிருக்கின்றன, அன்றியும் உபாஸனையை சரியாய் ஒருவர் தன் கிரஹத்தில் நடத்தவேண்டுமானால் அநேக சௌகரியங்களைச்செய்துகொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது. பூசாவிதிப்படி சரியாய் நடத்தினால்தான் மனது கிரமமாய் கட்டுப்பட்டு பக்தி ஸ்திரப்படும். அநேகர்களுக்கு அவர்கள் வீடுகளில் பலவிதமான சௌகரியக்குறைவுகள் காணப்படுகின்றன. ஈசுவராராதனத்திற்குவேண்டிய ஸாமக்கிரியைகள், ஸ்தல சௌகரியங்கள், பக்தியுள்ள சுற்றத்தார்கள், மனுஷிய சாதகங்கள் இவையெல்லாம் சேர்ந்து ஏற்படுவது அநேகர்களுக்கு துர்லபமாயிருக்கிறது. இவர்களை யுத்தேசித்துப்பொதுஆலயங்களையுண்டாக்கி, ஆராதனகாரியங்கள் சகலத்தையும் பொதுநன்மைக்காக நடத்திவரும்படிசெய்து, பக்திமான்கள் கோயிலுக்கு வந்து அவ்விடத்தில் நடக்கும் சகல ஆராதனக்கிரியைகளும் தங்களுக்காக நடத்தப்படுவதாக அறிந்து, மனதை விக்கிரஹாந்தர்யாமியான கடவுளிடத்தில் நாட்டித் தியான ஸமாதிகளினால் ஸம்ஸாரதுக்கத்தினின்றும் கரையேறுவதற்குள்ள ஏற்பாடுகளை ஸர்வக்ஞர்களான பெரியோர்கள் செய்திருக்கிறார்கள்.

(இன்னும் வரும்)

G. இராமச்சந்திரய்யர்

‘‘அபிப்பிராயபேதம்’’

சென்ற ஆகஸ்டு 10-உ பிரசுரஞ்செய்யப்பட்டுள் இப்பத்திரிகையின் 52-வது பக்கத்தில் "அபிப்பிராயபேதம் என்னும் தலைப்புவைத்து'' தெய்வந்தொழா அள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப்பெய்யுமழை'' என்னும் திருக்குறளின் கருத்து இன்னதென்று N. சங்கரலிங்கம்பிள்ளையவர்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. அதிற்குறிப்பிட்டிருக்கிற சங்கை நேர்டுங்காலத்தில் ௸ திருக்குறள் விஷயமாய் பேசியவர்களில் நானும் ஒருவன். சிலநாட் கழிந்தபின்னர் அதேவிஷயமாய்ப் பேசியவர்களிலும் நானொருவன். தமக்கு ௸ குறளின் கருத்துவிஷயமாய் யாதொரு ஐயமில்லாதிருந்தும், நானுவப்படப் பிறர்கொண்ட கருத்து "சூரியனைச் சந்திரனென்றும் சந்திரனைச் சூரியனென்றும் சொல்வதைப்போலவும், யானைபார்க்க வெள்ளெழுத்தா என்ற பழமொழியை நினைப்புண்டாக்கத்தக்கதாய்த்தெய்வநிந்தனை சாஸ்திர விபரீதார்த்தம் முதலியவற்றைக் கவனியாது வெளியிட்டதாகவு''மிருந்தும் ௸ திருக்குறளின் (அவர்கள் கொண்டபடிக்குள்ள) உண்மைப்பொருள் வெளிப்ப

ண்டுமென்னும் ஆராமையால் பரோபகாரார்த்தமாய்எழுதியதற்கு வந்தனமளிக்கின்றேன். என்னைப்போலொத்தமற்றவர்களும் அவர்களுக்கு வந்தனயளிப்பார்களென நம்புகின்றேன். ஆயினும் ஷையார்கள்கொண்ட கருத்தின்படி ஷை திருக்குறளினால் ஸ்திரீகளுக்கு தெய்வந்தொழல் விலக்கப்பட்டிருக்கிறதென்று எனக்கு இன்னும் புலப்படவில்லை யென்பதைப்பற்றி வியசனப்படுகிறேன். முதல்முதல் சங்கை நேரிடுங்காலத்தில் தெய்வத்தையும் தொழலாம் கணவனையும் தொழலாமென்றும், அதற்கு மாறுபாடாக சிலநாட்கழித்த பின்னர் தெய்வத்தைத்தொழமறந்தாலுங்கூட என்று வேறோரர்த்தமிருக்கிறதென்றும் சொன்னதாய்ச்சொல்லியிருப்பது ஞாபகமின்மையால் நேரிட்டதவறு. ஸ்திரீகள் கணவனையும் தொழலாம் என்று சொல்லவில்லை; கணவனைத் தொழவேண்டியதவசியமென்றும், அப்படிக் கணவனைத் தொழுகிற ஸ்திரீ தெய்வம் தொழாதவளாக இருந்தாலும் அவள் பெய்யென்றுசொல மழை பெய்யுமென்பது ஷை திருக்குறளின் கருத்து என்றும் ஷை திருக்குறளினால் தெய்வந்தொழல் விலக்கப்படவில்லையென்றும் தான் ஷை சங்கை நேர்ந்தகாலத்தில் நானுணப்பட பிறர்சொன்னது. சங்கரலிங்கம்பிள்ளையவர்கள் ஷை திருக்குறளினால் தெய்வந்தொழல் விலக்கப்பட்டிருக்கிறதென்றும் அபிப்பிராயப்பட்டார்கள். அக்கருத்துக்கொண்டே இப்பத்திரிகையிலும் எழுதியிருக்கிறார்கள். ஷை திருக்குறளினால் தெய்வந்தொழல் விலக்கப்பட்டிருக்கிறதா அல்லவா வென்பதுதான் சங்கை. திருக்குறள் முதலதிகாரம் கடவுள்வாழ்த்து பத்து திருக்குறள்களும் பொதுப்படையாய்ச் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர ஆண்மக்களுக்கு மாத்திரம் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. கடவுள் எல்லா ஆன்மாக்களுக்குந்தலைவன். உடம்பின் வித்தியாசத்தை வைத்து கடவுளின் தலைமைத்தன்மை மாறுபடாதென நம்புகின்றேன். தேகம் நிலையற்றது, ஆன்மா நித்தியமானது. ஆன்மாவின் தன்மையில் ஆண்மக்கள் ஆன்மா பெண்மக்கள் ஆன்மா என்ற வித்தியாசமிருப்பதாகத் துலங்கவில்லை. ஆன்மா இப்பிறப்பில் சேர்க்கப்பட்டுள தேகம் ஆண் தேகமாயிருந்தாலுமே பெண்தேகமாயிருந்தாலுமே 'தனக்குவமையில்லாதான் தாள் சேர்ந்தாலல்லாமல் மனக்கவலை மாற்றலரிது. ஒவ்வொரு ஆன்மாவுக்கும் அது அது இப்பிறப்பிற் சேர்க்கப்பட்டுள தேகத்தையும் சந்தர்ப்பங்களையும்வைத்து சிலசில விசேஷக்கடமைகள் ஏற்படுகின்றன. அப்பேர்ப்பட்ட விசேஷக்கடமைகளைஒவ்வொருஆன்மாவும் அனுசரித்துநடக்கவேண்டியதவசியம். அதினால் எல்லா ஆன்மாக்களுக்கும் ஏற்பட்டுள்ள தெய்வந்தொழல் முதலிய பொதுத்தர்மங்கள் விலக்கப்பட்டதாக நினைப்பது தவறென்று நினைக்கிறேன். ஒவ்வொரு பிதாவும் பொதுவாய்த் தன் தன் பிள்ளையின் நன்மையைக்கருதி நடக்கிறதாகஇருப்பதை உத்தேசித்தும் ஒவ்வொருவனும் அவனவன் பிள்ளைக்காகப்படுகிற பாட்டை உத்தேசித்தும் ஒவ்வொருவனும் தன் தன் பிதா வார்த்தைக்குட்பட்டு நடக்க வேண்டுமென்று ஒவ்வொருவருக்கும் விசேஷ விதி யேற்பட்டிருக்கிறது. அதை வைத்தே தந்தை சொற்கேள் என்று விதி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் பொய்யாமை கொலைசெய்யாமை கற்புநிலை காத்தல் முதலிய பொதுவிதிகள் எல்லாமனிதர்களுக்கும் ஏற்பட்டிருக்கின்றன. இப்பேர்ப்பட்டபொதுவிதிகளுக்கு விரோதமாக ஒரு தந்தை தன் பிள்ளையைப் பொய்சொல்லச்சொன்னாலும் கொலைசெய்யச் சொன்னாலும் அந்த வார்த்தையைக்கேட்டு நடக்கவேண்டியது மகனுடைய கடமையல்லவென்று நினைக்கிறேன். இது போலவே கணவன் பொதுவாக தன் ஸ்திரீயிடத்தில் அன்பு வைத்து அவளுடைய சுகதுக்கத்தைக்கவனித்து நடக்கவேண்டியவனாக இருப்பதால், ஒவ்வொரு ஸ்திரீயும் அவனிடத்தில் அன்பு வைத்து அவனை வணங்க வேண்டுமென்பது ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஏற்பட்ட சிறப்பு விதி. அதனால் தெய்வம் தொழல் என்ற பொது விதி விலக்கப்பட்டதாக வில்லை. கணவனாகிய சிற்றறிவுடைய மனுஷன் பேரறிவுடையகடவுளாக ஒரு நாளு மாகமாட்டான். அவனைப் பேரறிவுடைய கடவுளாகவாவது, அவருக்குப் பதிலாகவாவது கொண்டு வணங்குதல் தகுதியன்று.

காரைக்காலம்மை தன் கணவனை வணங்குவதில் எந்த ஸ்திரீக்கும் பின்னிடாதவளாகஇருந்தும், பரமதயாநிதியாகிய கடவுளை இடைவிடாது தியானித்திருந்து முத்தியடைந்ததும், ஸ்திரீ சிரோமணியாகிய மங்கையர்க்கரசி தன் கணவன் சமணனாக இருந்ததில் மனக்கவலையுற்று தன் கணவனுக்குத் தகவலின்றி ஞானசமபந்தரை வரவழைத்து தன்கணவனை சீர்ப்படுத்தி சிவபெருமானைத் தியானித்து முத்தியடைந்ததும், நீலகண்டர் தவறுதலுக்குட்பட்ட காலத்தில் அதை வெறுத்து, தன்னைத்தொடவேண்டாமென்ற ஷையார் ஸ்திரீ கடவுள்பேரில் ஆணையிட்டு கடவுளை பிரதானமாகவும் கணவனை இரண்டாவதாகவும் வழிபட்டு முத்தியடைந்ததும் சைவ நூல்களிற் சொல்லப்பட்டிருக்கிற தல்லவா? இவர்கள் ஷை திருக்குறளின்படி நடந்தவர்களல்லவோ? "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை" யென்றதனால், தெய்வமும் தொழுது கொழுநற்றொழுதெழுவாளுக்கு அவ்வித பயனில்லையோ? கொழுநற்றொழுதெழும் கற்புடைய ஸ்திரீ ஒரு சங்கதியை உத்தேசிக்க அதைக் கூட்டிவைப்பது கடவுளல்லவோ? கடவுள் தம்மைத் தொழாதவளாயிருந்தாலும் தனக்கு ஏற்பட்ட சிறப்புவிதியைச் சரியாய்ச்செய்த ஸ்திரீக்குக் கொடுக்கிற பலனை தம்மைத் தொழலாகிய பொது விதியின்படியுங்கடந்துவருகிற ஸ்திரீக்கு அளிக்கமாட்டாரோ? "கொழுநற்றொழுதெழுவாள் பெய்யெனப்பெய்யும் மழை" யென்றுமாத்திரம் சொல்லாமல், "தெய்வந் தொழாஅள்" என்று சேர்த்துச்சொன்னதினாலேயே குறையுள்ள ஸ்திரீயென்று ஏற்படவில்லையா? கணவனைத்தொழுதெழும் ஸ்திரீ கடவுளை வணங்குவதில் குறைவுபட்டிருந்தாலும் மழை பெய்யச்சொன்னால் பெய்யுமென்று கணவன் வணக்கத்தை விசேஷித்துச் சொன்னதாக முடியவில்லையா? தந்தைசொற்கேளாது தன் சகோதரனை நேசித்தால் அவனுக்கு வேண்டியதை அத்தந்தை கொடுப்பானென்றால் தந்தை சொற் கேட்க வேண்டாமென்று அர்த்தமா? அத்தந்தையானவன் தன் சொற் கேளாமையைப் பாராட்டாமல் வேண்டிய நன்மையைச் செய்வானென்பது கருத்தல்லவா? ஆதலால் தெய்வந்தொழாளென்று சொன்னதி

ஞலையே பெண்கள் தெய்வந்தொழவேண்டிய தவசியமென்றும், அதுவிஷயத்தில் குறைவிருந்தாலும் தன் கணவனை வணங்கினால் கடவுள் தம்மை வணங்காத அவளிடத்திலுள்ள குறையைக்கவனியாது அவளுக்குத்தக்க பலனைக் கொடுப்பாரென்பதும் விளங்கவில்லையா? இச்செய்யுளினால் தெய்வ வணக்கம் விலக்கல்லவென்பது மாத்திரமல்ல; தெய்வவணக்கம் ஸ்திரீகளுக்கு வேண்டுமென்பதும் அமைந்து கிடக்கிறதென நினைக்கிறேன்.

P. M. K.

தமிழிலக்கணச் சந்தேகங்கள்.

தமிழறிஞர்காள்,

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
யுண்டபாலனை யழைத்தது மெலும்பு பெண் ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்."

என்னப் பரஞ்சோதி முனிவராற் பெரிதும் வியந்தேற்றப்பெற்ற நமது தமிழுக்கு ஆன்றோராற் செய்யப்பட்டனவும், நம்மாற் றழுவப்பட்டனவுமாய இலக்கண நூல்களை யாராயுங்கால், எளியேற்குதித்த ஐயப்பாடுகளை நான் இவ்வரிய "திருநாவுக்கரசு" வாயிலாக நுங்கட்கு வெளியிட்டுத்தெளிய மிகுதியும் வேண்டுகின்றமையின், கற்றுணர்ந்த பெரியீர், அவைகட்குப் போதிய நியாயங் கூறித் தெளிக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

1. தமிழ் நெடுங் கணக்கில் (alphabet) மெய்யெழுத்துக்களுள்; க, ச, ட, த, ப என்னும் ஐந்து வல்லெழுத்துக்களையுந் முதலிலும், அவைகட்கு முறையே யினமாய ங, ஞ, ண, ந, ம என்னுமைந்து மெல்லெழுத்துக்களையும் அவ்வவற்றையடுத்தும், அதன்பின் ய, ர, ல, வ, ழ, ள, என்னும் இடையெழுத்துக்களையும் வைத்து முடிவில் ற, வென்னும் வல்லெழுத்தையும் ன, வென்னும் மெல்லெழுத்தையும் சேர்த்திருப்பதின் நோக்கமென்ன? இவையிரண்டும் இடையெழுத்துக்களுக்கு முன்னிற்றலன்றோ நியாயம்? "இவ்விரண்டும் மொழிக்கு முதலில் வாராதனவாதலின் அவ்வாறு வைக்கப்பட்டன" எனின், மொழிக்கு முதலில் வாராதனவாய ட, ண, ர, ல, நான்கையும் முதலில்வரும் வ, வுக்கு முன் வைத்தல் முறையன்றே? "ழ, ள, ற, ன, நான்கு மெய்யும் தமிழுக்கே சிறப்பாதலின் அவை கடையிலும், மற்றவை தமிழுக்கும் ஆரியத்துக்கும் பொதுவாதலின் முதலிலும் வைக்கப்பட்டன" வெனின், தமிழ் மொழியைப் பற்றிப் பேசுங்காற் பிறிதொரு மொழியைக் குறிப்பிடல் எதற்கு? "ஆரியத்தையனுசரித்தே தமிழுக்கும் இலக்கணம் வகுக்கப்பட்டதாதலின், அவ்வாறு அஃது குறிக்கப்பட்டது" எனின், "ஆரியமின்றித் தமிழ் தானே இயங்கவல்லது; தமிழும் ஆரியம்போன்று தனிமொழியேயன்றிச் சார்பு மொழியன்று; அவை ஒன்றற்கொன்று தாழ்ந்ததன்று" என்னும் சிலரது என்னுரை என்பயனுடைத்து? "அவ்வாறு சொல்வார் சிலரேயன்றிப் பெரும்பலரும் 'தமிழ் ஆரியம்பற்றி யெழுந்தது' எனவே துணிவர்" என ஒப்பின், மேற்கூறிய நெடுங்கணக்கில் தமிழுக்குமாரியத்துக்கும் பொதுவானவற்றை முதலிலும், மற்றவைகளைக் கடையிலும் வைத்தல் முறையே. ஆயின் க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, என்பன இருமொழிக்கும் பொதுவாயிருந்தும் வல்லெழுத்துக்களையும் அவற்றின் இனமான மெல்லெழுத்துக்களையும் முதலில் வைத்து, இரண்டுமல்லாத இடைகளைப் பின்வைத்தமை போன்று ழ, ள, ற, ன, என்னும் சிறப்பெழுத்துக்களுள்ளும் வல்லினமான ற,-வை முன்னும் அதற்கினமாய ன,-வை அதன்பின்னும் இரண்டுமல்லாத ழ, ள, வாய இடைகளைக் கடையிலும் வைத்தலன்றோ முறை. இன்னும், உயிரெழுத்துக்களுள் தமிழுக்கே சிறப்பான எ, ஒ, இரண்டையும் கடையில் வையாது இனம்பற்றிவைத்தமை என்? ஆதலின் ஆரியத்தை நோக்காது, பிறப்புநோக்கி க, ங, ச, ஞ, ட, ண, ற, ன, த, ந, ப, ம, என்றேனும், ஆரியத்தையே நோக்கி க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ற, ன, ழ, ள, என்றேனும் இருத்தல் முறை. இனி, உயிர்களுள், ஐ-யும், ஔ-வும் ஆவசியகமெனத்தோன்றினும், ஐ அதற்கு இனமான இ, ஈ-யின் பின்னும் ஔ அதற்கு இனமான உ, ஊ-வின் பின்னுமிருத்தல் முறையாமே? எ, ஒ இரண்டுஞ் சிறப்பெழுத்தாயிருந்தும், இனம் பற்றி முறையே எ, ஒ-வின்முன் வைக்க நினைவுபூண்ட நமது ஆன்றோர், ஐ-யை ஈ-யின் பின்னும் ஔ-வை ஊ-வின்பின்னும் வைக்கமறந்தமை எற்றினுக்கோ? ஆகவே, ஆரியத்தை நோக்காது பிறப்பை நோக்கி, அ, ஆ, இ, ஈ, ஐ, உ, ஊ, ஔ, எ, ஏ, ஒ, ஓ, என்றேனும்; ஆரியத்தை நோக்கி அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, எ, ஒ, என்றேனுமிருத்தல் சால்பன்றித் தற்கால வமைப்பு எனக்கெட்டியவரையிலும் தமிழ் வழியாயாவது ஆரிய வழியாயாவது பொருத்தமுடைத்தெனத் தோன்றுகின்றிலது.

2. தமிழ் மொழிக்கு ஐ, ஔ, இரண்டும் இன்றியமையாதனவா? இலக்கணிகள் ஐ = அய் எனவும் ஔ = அவ் எனவும், இன்னும் மெய் + நீண்டது = மெய்ந்நீண்டது என வருதல்போன்று கை + நீண்டது = கைந்நீண்டது என வருமென்றும், 'செய்யர்' என்பதற்குச் 'சையர்' என்பதும், 'வௌவா' என்பதற்கு 'வவ்வா' என்பதும் செய்யுளேதுகையா வருமென்றும் கூறுகின்றார்கள். ஆதலின், ஐ-யென்னுமெழுத்து ஒரு குறிலும் ய-கரமெய்யுங் கூடி ஒலிக்கும் ஒலியையும் ஔ, ஒரு குறிலும், வ-கர மெய்யுங் கூடி ஒலிக்கும் ஒலியையும் ஒலிக்கின்றதேயன்றிப் பிறிது வேறுபாடேதேனுமுடைத்தென எண்ணற் கிடனின்று. ஆயினும் அவை முன்னோராற்றொன்றுதொட்டுக் கூட்டெழுத்துப்போல வழங்கப்பட்டு வருகின்றமையால், அவற்றைத்தள்ளாது கொண்டிருப்பினும், பிற்காலத்தில் தமிழுக்கு இலக்கணம் எழுதிய அறிஞர்கள் அவற்றிற்கு நெட்டெழுத்தெனப் பெயரிட்டமை எவ்வாறு? நுடினும் அவைக்குத் தனித்தனி மாத்திரை இரண்டெனத் தீட்டினமை எவ்வழியால்? "தற்சுட்டளபொழி ஐ மூவழியுமையும், ஔ வுமுதலற்றாகும்" என்ற விதியின் பொருளென்ன? அரிவரிப்படிக்கும் பிள்ளைகள் மட்டும் "அயி" என்று இரண்டு மாத்திரை கொடுத்து உச்சரிக்கவேண்டுமென்றும், மற்றவர்களெல்லாரும் ஒரு மாத்திரை கொடுக்கவேண்டுமென்றும் பொருளா? 'கை' (கரம் hand) என்றவிடத்தில் உள்ள ஐ தற்சுட்

டோ? தற்சுட்டன்றேன் மாத்திரை அதற்கு ஒன்று தானே? ஒன்றுபின், 'கையால்' என்பதற்கு மாத்திரை (1+2+$\frac{1}{2}$) 3$\frac{1}{2}$தானே? நல்லது, 'கயால்' என்பதற்கு மாத்திரை (1+2+$\frac{1}{2}$) 3$\frac{1}{2}$ தான்; ஆகையால், 'கையால்' கயால் இரண்டிற்கும் ஒலியளவு ஒன்றே; அதாவது கையால் = கயால். இது உண்மையோ? 'ஐயா' என்பதற்கு நன்னூலார் வழியே மாத்திரை (1+2) 3 ஆனால் 'அய்யா' என்பதற்கு மாத்திரை உள்ளபடியே (1+$\frac{1}{2}$+2) 3$\frac{1}{2}$ ஆயின் அய்யா, ஐயா, இரண்டிற்குமிடையில், ஒலியளவில் யாதொரு வித்தியாசமுமிருப்பதாய்த் தோன்றுகின்றிலது. ஆனால், ஐயா வென்றெழுதினால் மாத்திரை 3 அய்யா வென்றெழுதினால் மாத்திரை 3$\frac{1}{2}$-என்பது அறிவுக்கெட்டுகின்றிலது! ஒருவேளை பேசுகிற மாத்திரை 3$\frac{1}{2}$-எழுதுகிற மாத்திரை 3-அல்லது 3$\frac{1}{2}$-எனச் சொல்லலாம்! உற்றுழியுடைத்து ஐ-க்கு 1$\frac{1}{2}$-மாத்திரை எனச்சொன்னவே முறை "*'பலகையால்' என்றவிடத்து அது 'பலகயால்' என ஒலிப்பதால் அங்கு ஒரு மாத்திரையே பெற்றது எனவும் இதைத்தான் நன்னூலார் ஐ-காரக் குறுக்கம் என்றார்" என யாரேனும் வருவரேல், போலி விதிப்படி 'பலகை' 'பலகய்' என்றாய் அத்துடன் 'ஆல்' புணர்ந்து ய-கர ஒற்றின் மீது அ-ஏற பலகய்+ஆல்=பலகயால் என வந்ததென்றும், அது வெண்ணெய்+ஆல் = வெண்ணெயால், திடர்+ஆல் = திடரால் என்பன போன்ற சாதாரணப் புணர்ச்சியுற்றதேயன்றி குறுக்கலேனும் நீட்டலேனும் பெற்றிலது எனவும் அவரறிவாரேயாவர். 'பலகை' என்பதின் ஈற்று-ஐ-காரத்தில் அந்தர்கதமாயிருக்கும் ய-கர ஒற்றின்மேல் வருமொழி முதலில் உள்ள ஆ-ஏறி அந்த ஒற்றின்மாத்திரைகெட ஐ-மீந்த மாத்திரையாகிய ஒன்றைக்கொண்டு நின்றது. (ஐ = அய். அய்-ய் = அ. ஃ ஐ-ய் = அ) ஆதலின் ஐ-க்கு மாத்திரை 1$\frac{1}{2}$-என்னல் எனது துணிபு; இந்நெறியே ஔ-வுக்கும் மாத்திரை 1$\frac{1}{2}$. (ஔவல் = 3, கவ்வல் = 3, கையால் = 4. செய்யால் = 4. தனிக்குறிலணைந்த மெய் வருமொழி யுயிரைநோக்கி யிரட்டித்தல்போல், 'கை' என்பதின் உண்ணின்ற ய-கரமெய் இரட்டித்துக் கய்யால் என ஒலித்தது. தனிக்குறிலணையா மெய் இரட்டியாதாகையால், பலகை+ஆல் = பலகயால் என வந்தது. 'பலகய்யால்' என வராதென்பது தெளிவே. இங்ஙனிருந்தும், "இலக்கியங் கண்டதற் கிலக்கணங் கூறும்" எமது முன்னோர் ஐ-யும், ஔ-வும் குறுகியொலிப்பதற்கு இலக்கியம் எங்ஙன் கண்டனரோ?

இவைகட்குப் போதிய நியாயமேனும் அபிப்பிராயமேனும் தயையோடு கூறுமாறு பிரார்த்திக்கின்றனன்,

இங்ஙனம்.

ஜி. எம். சுந்தரம்பிள்ளை,

குருமலை,

திருநெல்வேலி.

ஹிந்துகாலேஜ்.

பிரவேச பரீக்ஷைக்குரிய மாணாக்கர்களை செப்டம்பர் மாசத்திலும், நவம்பர் மாசத்திலும் இருவகையாகத் தெரிந்தெடுப்பதாக இவ்வருடம் ஏற்படுத்திய முறையானது அம்மாணாக்கர்கட்கும் அக்காலேஜினுக்கும் சிறந்த நன்மையை விளைக்கும். இவ்வித ஏற்பாடானது மிகவும் பாராட்டத்தக்கதே. காலேஜின் மானேஜிங் கமிட்டியாரவர்கள் இம்முறையையே என்றும் நிழுமாறு விதியேற்படுத்தி மாணாக்கர்கட்குக் கல்வியின் விருத்தியையும், காலேஜினுக்குச் சிறந்த மதிப்பையும் உண்டாக்குவார்களென்று நம்புகிறேன்.

இலக்குமணப்போற்றி.

*பலகை=மரப்பலகை=a plank,

சமாசாரக்குறிப்பு.

(1) சென்னை சட்ட நிருபணசபை:— சென்னை சட்ட நிருபண சபையில் வரப்போகிற மெம்பர் நியமனத்துக்கு Mr. K. R. குருசாமி அய்யரவர்களை தூத்துக்குடி முனிசிப்பாலிட்டியாரும் திருநெல்வேலி முனிசிப்பாலிட்டியாரும் தங்களுடைய காண்டிடேட்டாகத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள்.

(2) பிரமசமாஜம். பாபு. ஹேரம் சந்திர சர்க்கார் M. A. அவர்களால் "The making of a nation" (ஒரே தேசத்தாராதல்) and The Religion of Future India" (எதிர்கால இந்தியாவின் சமயம்) என்னும் விஷயங்களைப்பற்றி முறையே சென்ற சோமவாரத்திலும் புதவாரத்திலும் திருநெல்வேலி ஹிந்துகாலேஜில் இரண்டு பிரசங்கங்கள் செய்யப்பட்டன. அனேகஜனங்கள் வந்திருந்து கேட்டார்கள்.

(3) இவ்வூரில் 1904-ம் வருஷத்து X-வது ஆக்டை யனுசரித்து (Co-operative Credit Society) ஐக்கிய நாணய சங்கம் ஒன்று ஸ்தாபிக்கத் தீர்மானித்து நிபந்தனைகள் ஏற்படுத்த சப்கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள். இச்சபை அநேகர்களுக்குப் பெரும் பிரயோஜனத்தைக்கொடுக்கும் ஒவ்வொரு ஜமீந்தாரும் தம்தம் குடிகள் இவ்விதப்பிரயோஜனத்தை அடையும் பொருட்டு இவ்விதசங்கம் ஏற்படுத்தினால் மிக உசிதமாயிருக்கும்.

'சுதேசிஎழுச்சி.

20-உ மாலை, இந்து கலாசாலையில் திருநெல்வேலி மாணவர்களால் சுதேசக் கைத்தொழில், வியாபாரங்களை அபிவிர்த்தி செய்வதற்காக ஓர்சபை கூட்டப்பட்டது. மக-ள-ள-ஸ்ரீ மு. சு. பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள், பி. ஏ; சபாநாயகராக வீற்றிருந்தார்கள். இச்சபையின் முயற்சி யின்னதென்பதையும், இதன் கருத்துக்களையும் பற்றி சபாநாயகரவர்கள் சிறிதுநேரம் உபந்யஸித்தார்கள். மறுமுறை சங்கம் கூடுவதைப்பற்றிப் பின்னறிவிக்கப்படும். இந்து கலாசாலைக்கு பிரதம கலாசாலை மாணவரிருவர் பிரதிநிதிகளாகப் பெரும்பாலோர் அபிப்பிராயப்படி தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.'

பத்திராதிபர் குறிப்பு.

நமது பத்திரிகை ஒவ்வொரு ஆங்கிலமீறும் 10-உ வெளிவருமென்பதாகச் சென்ற பத்திரிகையில் தெரிவித்திருந்தோம். சில காரணங்களால் தாமசப்பட்டதைப் பற்றி மன்னிக்கப் பிரார்த்திக்கிறோம்.

நமது பத்திரிகை நேயர்கள் ஒவ்வொருவரும் தத்தம் சந்தாத்தொகையைச் செலுத்தும்படியாகக் கேட்டுக்கொள்கிறோம்.

"திருநாவுக்கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ்க."
திருச்சிற்றம்பலம்.

Printed and published by M. Draviam Pillai,
Aryaprakasini Press, Tinnevelly Bridge, 21-9-05